# சங்கத் தொகை நூல்களில் வணிகப் பொருளாதாரம்

**ஆய்வாளர்**
அ.சசிகலா
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்),
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி,
விழுப்புரம் 605-301.

**ஆய்வு நெறியாளர்**
முனைவர் எ. சுசான் மரி நெப்போலியன்,
உதவி பேராசிரியர் தமிழாய்வுத்துறை,
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி,
விழுப்புரம் 605-301.

*Abstract-* **As the ancient literature explains the doctrine of the Sangha period Business economics is multifaceted. Agriculture, animal husbandry, People lived by trade, barter, hunting and fishing Industries and economies depended on the lands. The business that started as barter developed and became a subsidiary of the Yavanas. They improved the economy by exporting and importing. By physical labor Increase production in industries and share food items among themselves This is a way of exploring the meaning of the eight songs becomes.**

*Keywords*: **Business economics, barter, Manufacturer's, Inventory.**

**ஆய்வுச் சுருக்கம்**

பண்டைய இலக்கியங்கள் திணைக் கோட்பாட்டினை விளக்குவது போலவே சங்ககாலப் வணிகப்பொருளாதாரம் பல வகைப்பட்டதாக இருந்துள்ளது. வேளாண்மை, கால்நடைவளர்ப்பு, வணிகம், பண்டமாற்றுமுறை, வேட்டையாடுதல், மீன் பிடித்தல் என்று மக்கள் வாழ்ந்த நிலங்களுக்கு ஏற்றவாறு தொழில்களும் அவை சார்ந்த பொருளாதாரமும் இருந்துள்ளன. பண்டமாற்று முறையில் ஆரம்பித்த வணிகமானது வளர்ச்சியடைந்து யவனர்களின் துணைக் கொண்டு ஏற்றுமதி, இறக்குமதி செய்து பொருளாதாரத்தை மேம்படுத்தினர். உடல் உழைப்பால் தொழில்களில் உற்பத்தியினை பெருக்கி தங்களுக்குள் உணவுப்பொருள்களை பகிர்ந்து கொண்டனர் என்பதனையும் எட்டுத்தொகை பாடல்கள் வழி ஆராயும் விதமாக இவ்வாய்வானது அமைகிறது.

## சங்கத் தொகை நூல்களில் வணிகப் பொருளாதாரம்

### முன்னுரை

சங்கால மக்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் பாலை என ஐந்து வகை நில அடிப்டையில் வாழ்ந்து வந்தனர். குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்தவர் குறவர், முல்லை, நிலத்தில் வாழ்ந்தவர் ஆயர், ஆய்ச்சியர், மருதநிலத்தில் வாழ்ந்தவர் உழவர், உழத்தியர் நெய்தல் நிலத்தில் வாழ்ந்தவர் பரதவர், பரத்தியர். இவர்கள் தங்கள் நிலத்தில் விளைகின்ற உணவுப் பொருட்களான நெல், உப்பு, மீன், நெய், பால், பயிர், கள் ஆகிய பொருட்களைப் பண்டமாற்று வணிகம் செய்து கொண்டனர் என்பதை சங்க இலக்கியப் பாடல்கள் வழி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

### வணிகம்

பண்டையத் தமிழகத்தில் வணிகம் முதன்மை சான்றாக பொருளாதார சக்தியாக உருவான போது சமூகத்தில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்தேறின அந்த மாற்றங்கள் பண்டைய பண்பாட்டிலும், தொழில்நுட்பத்திலும், பல்வேறு மாற்றங்களை கொண்டுவந்தன. உள்நாட்டில் உற்பத்தி செய்த இடங்களிலேயே விற்றல், உற்பத்தி செய்த

பொருட்களை அல்லது விளைந்த பலவிதமான பண்டங்களைக் கடைவீதிகளில் வைத்து விற்றல், ஓரிடத்தில் உற்பத்தி செய்த பொருட்களை மற்ற இடங்களில் கொண்டு விற்றல், வீடு வீடாகப் பொருட்களைக் கொண்டு செல்லல் ஆகிய வழிகளில் நடைப் பெற்றுவந்துள்ளது.

“உற்பத்தியாளர்களிடம் சரக்குகளைக் கொள்முதல் செய்து தரநிலைப்படுத்தி கட்டுமம் செய்து பாதுகாத்து நுகர்வோர்களுக்கு வேண்டும் போது விற்றிடும் செயலை வணிகம் செய்கிறது. சரக்கு பரிமாற்றம் தான் இதன் முக்கியச் செயலாகும். வாங்கி விற்றல் தான் இதன் வணிகத்தின் ஆணிவேர் சில்லறை வணிகம், மொத்த வணிகம், உள்நாட்டு வணிகம், வெளிநாட்டு வணிகம் எனப் பல்வகையாக இதைப் பிரிக்கலாம் மேலும் தொலைவு, ஆபத்து, நட்ட அச்சம் போன்றனவும் வணிகம் செய்திடத் தடைகளாக உள்ளன” என்று வாழ்வியல் களஞ்சியம் (தொகுதி 14) வணிகம் குறித்து வரையறுத்துள்ளது.

“பண்டையத் தமிழகம் நீண்ட கடற்கரையையும், எண்ணற்ற இயற்கை வளத்தையும் தன்னகத்தே கொண்டு விளங்கியதால், அம்மக்கள் வணிகத்திலும் தொழில்நுட்பத்திலும், சிறந்து விளங்கினர் என்பதை அண்மைக்காலத் தொல்லியல், கல்வெட்டியல், நாணயவியல் சான்றுகள் உணர்த்துகின்றன. என்பதை எடுத்துரைத்துள்ளார்”(முனைவர். கா.ராஜன்).

பண்டமாற்றுமுறை பழம் தமிழர்களின் சமுதாயத்தின் பொருளாதார வளத்தை வெளிப்படுத்துவது அம்மக்களின் வணிக முறைகளாகும். பண்டையத் தமிழர்கள் தங்களிடம் உள்ள பொருட்களை பிறருக்கு கொடுத்து தமக்குத் தேவையான பொருட்களை பெற்றுக் கொண்டனர். இம்முறையினையே பண்டமாற்று வணிகம் என்பர். கிராமங்களில் தொடங்கி மேலை நாடுகளிலும் பண்டமாற்று வணிகம் நடைப் பொற்றுள்ளதனையும் அறியமுடிகிறது.

“ஒரு பொருளளைக் கொடுத்து இன்னொரு பொருளை வாங்குதல் என்பது தொடர்ந்து வரும் நிகழ்வு இருபதாம் நூற்றாண்டு ஆரம்பம் வரை கிராமங்களில் இவ்வழக்கம் நடைமுறையில் இருந்தது. பண்டமாற்று முறை என்பது உள்நாட்டு வணிகமுறை ஒருவர் அன்பிற்காக ஒன்றைக் கொடுத்து அவர் பதிலுக்கு வேறு ஒன்றைக் கொடுத்தல் பரஸ்பர பரிமாறுதல் என்ற வகையில் இந்த வணிகம் ஆரம்பித்திருக்க வேண்டும். பண்டைக்காலத்தில் நகரத்தில் மட்டுமே பெரிய அங்காடிகள் இருந்தன. மொத்தத் தமிழகத்தில் இருந்த அங்காடிகளை விரல்விட்டு எண்ணிவிடலாம். பொரும்பாலான கிராமங்களில் பண்டமாற்றுமுறை வணிகமே நடந்தது சில சமயம் மாட்டுவண்டியிலோ, கழுதையிலோ, தலை சுமட்டிலோ பொருட்களைக் கொண்டு சென்று விற்றுள்ளனர்”. என்பதனை எடுத்துறைத்துள்ளார். (அ.க.பெருமாள்)

## ஐவகை நிலத்தில் பண்டமாற்றப்பட்ட வணிகப்பொருட்கள்

பண்டைய தமிழர்கள் முதலில் பண்ட மாற்றப்பட்ட பொருள் உப்பாகத்தான் இருக்கும். ஏனெனில் மனிதன் நெருப்பை அறிந்தபின் வேட்டையாடி தான் சேகரித்த பொருட்களையெல்லாம் தீயிட்டு வறுத்தும் இறைச்சியில் கிடைக்கபெற்ற நெய்யில் பொரித்தும் உண்டிருப்பான். அதன் பிறகே உப்பின் தேவையை அறிந்து கொண்டிருப்பான். எனவே உப்பே பண்டமாற்றத்தில் முதன்மை நிலையினை வகுக்கின்றது.

## உப்பிற்கு ஈடாக நெல்லை பெறுதல்

கடற்கரையினை வாழ்வாதாரமாக கொண்ட நெய்தல் நில மக்கள் தங்களின் செத்தாகக் கருதப்படுவது உப்பாகும். ஏனெனில் மற்ற நிலங்களில் உள்ள நீர் நிலைகளில் மீன் கிடைக்கின்றன. கடலில் கிடைக்கப்படுகின்ற மீன், நண்டு போன்ற எண்ணற்ற உணவுவகைகள் மற்ற நிலத்தாருக்குக் கொடுப்பவர்கள் நெய்தல் நிலத்தவர்களே இதனை,

**“உப்பு நொடை நெல்லின் மூரல் வெண் சோறு”**

**(அகம். 60)**

என்ற பாடல் அடிகள் நெய்தல் நிலத்தில் பரதவப் பெண் ஒருத்தி உப்பிற்கு ஈடாகப் பெற்ற நெல்லைக் கொண்டு சோறுவடித்து மீனைச் சேர்த்து உண்டு மகிழ்ந்துள்ளதனை,

**“வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி**
**நெல்லொடுவந்து வல்வாய்ப் பஃறி”**
**(பட்டி பா. வரி 29-30)**
மேற்கண்ட அடிகள் பரதவப் பெண் உப்பிற்கு ஈடாக நெல்லைப் பெற்றதை உணர்த்துகின்றன.
நெய்தல் நில மக்கள் நெல்லும் உப்பினையும் ஒரே விலையாக கூறி வாங்கிக் கொள்ளுமாறு அங்குள்ள சேரிதோறும் விலை கூறிவிற்றுள்ளனர். என்பதனை,
**“நெல்லின் நேரே வெண்கல் உப்பு எனச்**
**சேரிவிலை மாறு கூறலின்”**
**(அகம் 140)**
எனும் அகநானூற்று பாடல் குறிப்பிடுகிறது.
**“நெல்லும் உப்பும் நேரே ஊரீர்**
**கொள்ளீரோ எனக் சேரிதொறும் நுவலும்”**
**(அகம் 390)**
என்ற அகநானூற்று பாடலடிகள் நெல்லைக் கொடுத்து அதற்கு ஈடாக உப்பினை சமளவாக பெற்றுள்ளதனை அறியமுடிகிறது.
உப்பு வணிகர்கள் பல ஊர்கள் சென்று தங்கள் உப்பினை விற்று அதற்கு ஈடாக பெற்ற நெடை நெல்லினை குற்றிச் செய்த உணவை குதிரைக்கு உணவாக கொடுத்துள்ளனர்.
**“உமணர் தந்த உப்பு நொடை நெல்லின்**
**ஆயினி மா இன்று அருந்த”**
**(நற். 254)**
**நெல்லிற்கு ஈடாக உப்பைப் பெறுதல்**
மருதநிலமானது வயலும் வயல் சார்ந்த பகுதி என்று தமிழ் இலக்கண இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. அத்தகு சிறப்பினைக் கொண்ட மருத நிலத்தில் தான் நெல் பொரும்பான்னையாக உற்பத்தி செய்யப்படுகிறது. குறிஞ்சி நிலத்திலும் நெற்பயிரை விளைவித்தனர் மருத நிலத்தில் வாழ்கின்ற உப்பு வணிகர்கள் தம் நாட்டில் விளைந்த வெண்நெல்லை வண்டிகளிலே ஏற்றிக்கொண்டு விற்றுவருவர். தாம் விற்ற வெண் நெல்லிற்க்கு ஈடாக நெய்தல் நிலப்பகுதியில் விளைந்த உப்பினை பெற்றுவருவர். அவ்வாறு தாம் கொண்டுவந்த உப்பைத் தமது நாட்டில் விலை கூறி விற்றுள்ளனர். என்பதனை,
**“தம் நாட்டு விளைந்த வெண்ணெல் தந்து**
**பிற நாட்டு உப்பின் கொள்ளை சாற்றி**
**நெடு நெறி ஒழுகை நிலவு மணல் நீந்தி**
**அவண் உறை முனிந்த ஒக்கலொடு புலம் பெயர்ந்து**
**உமணர் பேகலும்”**
**(நற் 183)**
மேற்கண்ட பாடல்வரிகள் பண்டைய தமிழர்களின் தொழில்திறனை அறியமுடிகிறது.
**மீனிற்கு ஈடாக நெல் பயிரை பெறுதல்**
மீன்படித் தொழிலை உடைய பரதவர்கள் தங்களின் வலைகளில் பிடிப்பட்ட மீன்களைத் தங்களின் உணவுத் தேவைக்குப் பிறகுள்ளதை அடுத்த நிலத்தாரின் பண்டத்திற்கு ஈடாகக் கொடுத்துள்ளதனை,

**“மீன் நொடுத்து நெல் குவை”**
**(புறம் 343)**
எனும் மேற்கண்ட பாடல் மீனிற்கு ஈடாக நெல் பெற்றதனை அறியமுடிகிறது.
மருத நிலத்தில் வாழ்கின்ற பாண்மகளின் அண்ணன்மார்கள் நள்ளிரவு என்றும் பாராமல் நீண்ட மடுவில் நீர்நிலை கலங்குமாறு உடலில் கோடுகளைக் கொண்ட வாளை மீனைப் பிடித்துக் கொண்டு தருவர். அவ்வாறு பிடித்த மீன்களை விற்க மருதநில மக்கள் அம்மீனிற்க்கு விலையாக முகந்து கொடுக்கும் பழம் நெல்லினை பெற்றுள்ளனர்.
**“-------------------பாண்மகள்**

**நெடுங்கொடி நுடங்கும் நறவுமலி மறுகில்**
**பழஞ்செந் நெல்லின் முகவை கொள்ளாள்"**
**(அகம் 126)**

எனும் அகநானூற்று பாடலின் வழி அறியப்படுகிறது. மேலும், நெல்லிற்கு உப்பினை குறையாது கொடுத்த பண்டைய தமிழர்கள் பாண்மகளிர் கொண்டு வந்த கெடிற்று மீனை ஒரு வட்டி மீனுக்கு ஒரு வட்டி பயிறு என்ற வகையில் மாற்றிக் கொண்டனர். பண்டமாற்று முறையில் விலையாக பொருட்கள் இருந்துள்ளதனை,

**"முள் எயிற்றுப் பாண்மகள் இன் கெடிறு செறிந்த**
**அகன் பெரு வட்டி நிறைய மனையோள்**
**அரிகாற் பெரும் பயிறு நிறைக்கும்"**
**(ஐங் 47)**

வணிகர்கள் இலாபம் ஒன்றினையே முதற்கண்ணாக கொள்ளாது தான் வணிகம் செய்யும் பொருளின் தரமும் வணிகம் செய்யும் முறையும் நடுநிலையுடன் இருத்தல் வேண்டும் என்று பின்வரும் குறளின் வழி முதற்பாவலர் வணிகத்தின் சிறப்பினையும், வணிகர்களின் சிறப்பினையும் குறிப்பிடுகிறார்.

**"வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்**
**பிறவும் தமபோல் செயின்"**
**(குறள் 120)**

"பண்டமாற்று முறையின் வழி விலையைக் காசாக கணக்கிட முடியவில்லை. ஆனால் நெல்லின் அளவில் பொருட்கள் கொடுத்துப்பட்டன என தெரிகிறது. 20 நாழி நெல்லுக்கு 1 நாழி நெய், 2 நாழி நெல்லுக்கு 1 நாழி பால், 2 நாழி நெல்லுக்கு 1 நாழி தயிர் என்ற கணக்கை திருச்செந்தூர் கல்வெட்டு குறிக்கிறது. இன்னொரு கல்வெட்டு 1 கழஞ்சு பொன்னுக்கு 40 நாழி எண்ணெய் என பண்டமாற்ற முறையின் சிறப்பம்சத்தினை குறுப்பிடுகிறார்" (அ.க.பெருமாள்).

மீனைப் பிடித்துக் கொண்டு அம்மீனிற்கு விலையாக பழைய வெண்ணெல்லை பெற்றுக் கொண்டு சென்றுள்ளனர்.

**"வராஅல் சொரிந்த வட்யுல் மனயோள்**
**யாண்டுகழி வெண்ணெல் நிறைக்கும்"**
**(ஐங். 48)**

**மீனிற்கு விலையாக கள்ளை பெறுதல்**

பாணர்கள் பெரிய துறையிடத்து மீன் வேட்டையில் கொண்டு வந்த வாரல் மீன்களை துண்டங்களாக்கி அக்கொழுவிய துண்டங்களை விற்று அவற்றிற்கு விலையாக கள்ளினை பெற்றுள்ளனர் என்பதனை,

**"நாள் துறைப் பட்ட மோட்டு இரு வரா அல்**
**துடிக்கண் கொழுங்மகுறை நொடுத்து உண்டு ஆடி"**
**(அகம். 196)**

**கள்ளிற்கு விலையாக நெல்லை பெறுதல்**

பண்டைய தமிழர்கள் கள்ளினை விற்று அக்கள்ளிற்கு விலையாக நெல்லினை பெற்றுள்ளனர்.

**"நறவு நொடை நெல்லின் நாள் மகிழ் அயரும்"**
**(அகம். 61)**

அகநானூற்று பாடல்கள் பண்டமாற்றத்தின் சிறப்பும் தேவைகளையும் எடுத்துரைக்கின்றன.

**நெல்லிற்கு விலையாக கள்ளை பெறுதல்**

முல்லை நில உழவர்கள் விளைவித்த நெல்லினை கொடுத்து அந்த நெல்லிற்கு விலையாக கள்ளினை பெற்றுள்ளனர்.

**"வளனுளுடைச் செறுவின் விளைந்தவை உதிர்ந்த**
**களன் அறு குப்பை காஞ்சிக் சேர்த்தி**
**அரியல் ஆர்கை வன் கை வினைநர்"**
**(பதிற். 62 அடி 14-16)**

**கள்ளிற்கு விலையாக பயிரை பெறுதல்**

வேளாண்தொழில் சிறந்து விளங்கிய தமிழர்கள் தங்களின் உழைப்பினை கொண்டு நெல் முதலிய பயிறு வகைகளை சிறப்பான முறையில் விளைவித்தனர். உழவர்கள் உடல் கலைப்பினை போக்க கள்ளினை உண்ணும் பொருட்டு கள்ளை விற்றிலையுடைய கடைத் தெருவில் அக்கள்ளிற்குரிய சிறந்த விலையின் பொருட்டு வெள், வரகுபயிரையும், கொள்ளுப்பயிரையும் பண்டமாற்றிக் கொண்டுள்ளதனை,

**“கள்ளுடை நியமித்து ஒள் விலை கொடுக்கும்**
**வெள்வரகு உழுத கொள்ளளுடைக் கரம்பைக்;”**
**(பதிற். 75 அடி 10-11)**

எனும் பதிற்றுப்பத்து பாடலில் அறியப்படுகிறது.

**கள்ளிற்கு விலையாக காட்டு யானையின் கொம்பினை பெறுதல்**

பாலை நில மக்களான ஆறலைகள்வர்கள் கள்ளிற்கு விலையாக கொடுப்பதற்கு பொருட்கள் ஏதும் இல்லாமையினால் தங்களின் மனையிடத்தில் உள்ள காட்டு யானையின் வெண்ணிறக் கொம்புகளை கொடுத்து கள்ளுண்டு மகிழ்ந்துள்ளதனை,

**“அரிய லாட்டியர் அல்குமனை வரைப்பில்**
**மகிழ் நொடை பெறஅ ராகி நனைகவுள்**
**கான யானை வெண்கோடு சுட்டி”;**
**(அகம். 245)**

எனும் அகநாநூறு பாடல் தெளிவுபடுத்துகிறது.

**“செங் கோட்டு ஆமான் ஊனொடு காட்ட**
**மதனுடை வேழத்து வெண் கோடு கொண்டு**
**பொன்னுடை நியமத்துப் பிழி நொடை கொடுக்கும”;**
**(பதிற் 30 10-12)**

மேற்கண்ட பதிற்றுப்பத்து பாடல் பண்டமாற்று முறையில் யானையின் தந்தத்தின் மதிப்பினையும் சிறப்பினையும் எடுத்துரைக்கின்றது.

**பொன்னிற்கு ஈடாக மிளகு பெறுதல்**

சங்க தமிழர்கள் வணிகத்தில் சிறந்து விளங்கினர். வணிகத் தொழிலில் சிறப்பு மிக்க யவனர்கள் பண்டைய தமிழகத்தில் விளைந்த பொருட்களை மரக்கலங்களில் கொண்டு சென்றனர். அவ்வாறு யவனர்கள் கொண்டு வந்த மரக்கலம் பொன்னை கொடுத்து அப்பொன்னிற்கு ஈடாக மிளகினை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளதனை,

**“யவனர் தந்த வினைமாண் நன்கலம்**
**பொன்னொடு வந்து கறியோடு பெயரும்”**
**(அகம் 149)**

மேற்கண்ட பாடலடிகள் பொன்னிற்கு இணையான மதிப்பினை மிளகு பெற்றுள்ளதனை சங்க பாடல்கள் தெளிவுப்படுத்துகிறது.

**முடிவுரை**

பண்டைய தமிழர்களின் வணிகப் பொருளானது ஆரம்பநிலையில் பெரும்பாலும் பண்டமாற்று முறையில் நடைபெற்றுள்ளதனையும், நாணயங்கள் தோன்றுவதற்கு முன்னர் இம்முறை மக்களின் தேவைகளை சிறப்பான முறையில் பூர்த்தி செய்துள்ளது. நிலத்திற்கு ஏற்றவாறு பண்டமாற்று முறை நடைபெற்றமையினால் அவரவருக்கு தேவையான பொருட்களும் சரிவர கிடைக்க பெற்றுள்ளன. பண்டமாற்றுப் பொருட்களான நெல், பயிறு, மீன்கள், உப்பு, கள், இறைச்சி, யானையின் கொம்பு, பொன் போன்ற பொருட்களின் மதிப்பினை பொருட்படுத்தாமல் சக மனிதர்களின் பரஸ்பர உணர்வினையே உயர்வாக கருதியுள்ளனர். இன்றைய காலகட்டத்திலும் சில ஊர்களில் பண்டமாற்றுமுறையினை காணமுடிகிறது. சங்ககால மனிதர்கள் தங்களின் மனிதநேயத்தினை இன்றைய தலைமுறையினருக்கு இலக்கியத்தின் வாயிலாக எடுத்துரைத்துள்ளனர்.

**துணைமை நூற்கள்**

1. தமிழகப் பண்பாடு (அ.கா.பெருமாள்)
2. தொல்லியல் நோக்கில் சங்ககாலம் (முனைவர்.கா.ராஜன்)
3. திருக்குறள் தேசிய நூல் (முனைவர் கோ.விசயராகவன்)
4. வாழ்வியல் களஞ்சியம் (தொகுதி 14)